OSSLO institute
Barathy Lane.
Kachcheri East, JAFFNA.
ஆண்டுகள் 6 7 8,9,10
GCE O/L
(Day கலை, மாலை)
விஞ்ஞானம் - Babu(மகேந்திரன்) தனபாலன்
கணிதம் - தெய்வ சபாரட்னம், சரவேந்திரன்
தமிழ் - சைவத்தமிழ், பண்டிதர் துரைராஜா
ஆங்கிலம் - எஸ். சர்மா
சமூகக் கல்வி - ம.ம்.நூர் தங்கையா
சுகாதாரம் - இளங்கீரன்வரன்

Registered as a Newspaper

உதயன்

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

OSSLO Institute
Barathy Lane. Kachcheri East.
JAFFNA.
G.C.E A/L 87, 88
கலை, வர்த்தக, விஞ்ஞான வகுப்புக்கள்
பொருளியல் - சிவனேந்திரம்
வர்த்தகம் - கனகரட்னம்
கணக்கியல் - சோசிங்கம்
அளவையியல் - சரவணபவானந்தம்
தமிழ் - கைலாசநாதன்
சிந்து நாகரிகம் - கனகசிங்கம்
புவியியல் - முருகையா
அரசியல் - ம.ம்.நூர்
A/L 86 Physics Paper Class
ஞாயிறு 5 12-66 4-30 p.m.
ஆசிரியர்: சக்தி

கடுர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு சித்திரை மீ 19 உ வெள்ளிக்கிழமை ஹிஜிரி ஷவ்வால் பிறை 22 (02.05.1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கிழ:141

மேல்நாட்டு மூளை

ஆடு நனையுது என்று ஓநாய் அழுத கதை தெரியுமே உங்களுக்கு . . . அதுதான் இப்ப நடக்கிற கதை!

கபநேரம்

02-5-1986
வெள்ளிக்கிழமை

கபநேரம்:
5.57 முதல் 7.27 வரை
ராகுகாலம்:
10.27முதல் 11.57 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொதுவானவை
நவமி பின்னிரவு 11.32 வரை

இனப்பிரச்சினை பேச்சுவார்த்தை:

கூட்டணியோசனைகளையே இந்தியக் குழு வற்புறுத்து

ஆனால் அரசாங்க தரப்பில் சாதகமான பதிலில்லை

கொழும்பு, மே 2

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மாற்று யோசனைகளைத்தான் இந்தியத் தூதுக்குழு தொடர்ந்து இலங்கை அரசுத் தலைவர்கள், அமைச்சர்களிடம் வற்புறுத்தி வருவதாக மிக நம்பிக்கையாக அறிய வருகிறது.

கூட்டணியின் யோசனைகளை எந்தளவுக்கு ஏற்றுக்கொள்ளப் போகின்றீர்கள் என்று கேட்டு அறிவதிலும் இந்தியக் குழு அக்கறையுடன் ஈடுபட்டு வருகின்றதாம். கூட்டணி மாற்று யோசனைகளைப் பொறுத்த அளவில், இலங்கை ஜனாதிபதி, அரச அமைச்சர்கள் கூறும் கருத்துக்களை இந்தியக்குழு குறிப்பு எடுத்து வைத்துள்ளது.

சாதகமாக இல்லை

இரண்டு தினங்களாக நடைபெற்று வந்த பேச்சுக்களில் கூட்டணி யோசனைகள் குறித்து சாதகமான கருத்துக்கள் வெளிவரவில்லை என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து தெரிய வருகிறது.

வடக்கு—கிழக்கு இணைப்பு—

அல்லது இரண்டு மாகாணங்களுக்கும் இடையிலான ஏதாவது ஒரு வகையான இணைப்பு—

ஆகியவற்றை ஏற்றுக் கொள்ள முடியாது என்று அரசுத் தலைவர்கள், அமைச்சர்கள் வற்புறுத்தியுள்ளதாகவும் நம்பகரித்த வட்டாரங்கள் கூறுகின்றன.

நேற்றைக்கான 10 மணிக்கு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் பண்டார்நாயக்காவுடன் சந்தித்து இந்தியக்குழு பேச்சுக்களை நடத்தியது.

காலை 11 மணியளவில் அமைச்சர் காமினி திசாநாயக்காவையும் மாலை 4 மணியளவில் டாக்டர் ஹெக்டர் ஜெயவர்த்தனவையும் இந்தியக்குழு

(4 ஆம் பக்கம் பார்க்க)

வாகனங்கள் திருப்பி அனுப்பப்பட்டன

நல்லூர், மே. 2

நேற்றுக்காலை கொழும்பு செல்வதற்கென யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட பொதிகள், பஸ்கள் வரவும் கொடிகாமம் பகுதியில் வைத்து இளைஞர் கோஷ்டி ஒன்றினால் திருப்பி அனுப்பப்பட்டன.

இதனால் பயணிகளும் பொதிகளும் கொழும்பு செல்லாமல் மீண்டும் யாழ்ப்பாணம் திருப்பி வந்தன.

15 பேர் பூஸாவுக்கு

கொழும்பு, மே 2

அம்பாறை மாவட்டத்தில் சைது சேர்யப்பட்டவர்களில் 15 பேர் பூஸா தடுப்பு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

இவ்வளவு பேரும் முன்னிய தீவிரவாதிகள் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

கைது செய்யப்பட்ட 51 பேரில் இந்த 15 பேரைத் தவிர ஏனையோர் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

இந்திய மீனவர் மீது துப்பாக்கிச் சூடு!

சென்னை, மே 1

இந்தியக் கடல் எல்லையில் மீன் பிடித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது. இந்தாக்குதலில் 4 இந்திய மீனவர்கள் காயம் அடைந்தனர்.

இவ்வாறு மீனவர் சங்க செயலாளர் சென்னையில் அறிவித்தார்.

காயப் பட்டவர்கள் ராமேஸ்வரம் அரசினர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் அவர் கூறினார்.

விட்டுக் கொடுத்தே பிரச்சினைக்கு தீர்வு

தொண்டமான் கூறுகிறார்

கொழும்பு, மே 2

விட்டுக் கொடுத்துத்தான் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டும். பிடிவாதம் கூடாது.

இந்தியத் தூதுக் குழு கொழும்பு வருவதற்கு முதல்நாள் இதனை நான் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்துக் கூறி விட்டேன்.

இப்படி அமைச்சர் தொண்டமான் கூறினார்.

தொண்டமான் கூறினார். இதனையே தமிழர் விடுதலைக் கூட்டணியும் நான் கூறுகிறேன்.

இரண்டு பக்கமும் பிடிவாதமாக இருக்காமல் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது.

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிழக்கில்

தமிழர் -- முஸ்லிம்கள் மட்டுமே குடியமர்த்தப்பட வேண்டும்

இந்தியக் குழுவிடம் கூட்டணி வலியுறுத்து

கொழும்பு, மே 2

மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கிழக்கு மாகாணத்தில் குடியமர்த்தப்படுபவர்கள் நூற்றுக்கு நூறு தமிழரும் முஸ்லிம்களுமாகவே இருக்க வேண்டும்.

இந்த அடிப்படையில் இருந்து தமிழர் விடுதலைக் கூட்டணி எள்ளளவும் விட்டுக் கொடுக்காது.

இப்படி தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வம் இந்தியக் குழுவிடம் நிலைவலியுறுத்தினார் என்று கூறினார்.

இந்தியக் குழு, நேற்று இரண்டாவது நாளாகத் தனது சந்திப்புக்களை ஆரம்பிக்கும் முன்னர் தமிழர் விடுதலைக் கூட்டணிக் குழு ஒன்றைச் சந்தித்தது.

டாக்டர் நீலன் திருச்செல்வத்துடன் மன்னார் முன்னாள் எம். பி. திரு. பி எஸ். சூசைதாஸனும் சந்திப்பில் கலந்துகொண்டார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறும் மகாவலி அபிவிருத்தித் திட்டங்களில் தமிழரும் முஸ்லிம் மக்களுமே குடியேற்றப்பட வேண்டும் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 18,000 ஏக்கர் கிழக்கு மாகாணத்தில் உள்ளது

100க்கு 100 இக்காணிகள் தமிழ் - முஸ்லிம் மக்களுக்கு உரியவை

சிங்களப் பகுதிகளில் (4 ஆம் பக்கம் பார்க்க)

ஒற்றுமை அவசியத்தை மேதினம் உணர்த்துகிறது

ஐக்கிய மேதினக் கூட்டத்தில் உரை

உடுவில், மே 2

உலகத் தொழிலாளர்கள் ஒன்றுபட்டு அமெரிக்காவில் நடத்திய போராட்டத்தை இன்று மேதினமாக கொண்டாடும் நாம், எமக்கிடையேயான பிரிவுகளுக்கு வேறு நாடுகளையும் பேதங்களையும் மறந்து ஒற்றுமைப்படவேண்டும். இதன் அவசியத்தை இன்றைய மேதினம் சகல தொழிலாளர்களுக்கும் நிரப்பாக இந்த நாட்டிலுள்ள சகல தமிழ் மக்களுக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கும் போதிக்கிறது.

கல்லூரிகளுக்கு சந்தை மைதானத்தில் வடமாநிலத் தொழிற்சங்கங்களும் வெகுஜன அமைப்புக்களும் இணைந்து நடத்திய ஐக்கிய மேதின கூட்டத்துக்குத் தலைமை வகித்து உரையாற்றிய திரு. எஸ். விஜயானந்தன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

வடமாநிலத் தொழிற்சங்கங்களின் பிரதான அமைப்பாளரான திரு. எஸ். விஜயானந்தன் மேலும் பேசுகையில்—

தமிழ் மக்கள் மீது அரசு நடத்தும் வன்கொலை வெறியன் அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கும் அதன் ஏவல் நாய்களுக்கும் நியாயப்படுத்த அரசின் தலைவர்கள் எத்தனை பொய்களை கூறினாலும், உலகில் உள்ள சோஷலிஸ்ட் அமைப்பின் நிராகரித்து தமிழ் மக்கள் மீது ஜெயவர்த்தனா அரசு கொடுமையான

(4 ஆம் பக்கம் பார்க்க]

வடக்கு -கிழக்கை தமிழர் தாயகமாக அங்கீகரியுங்கள்

இடது கம்யூனிஸ்ட் கூட்டத்தில் உரை

நல்லூர், மே 2

வடக்கு — கிழக்குப் பகுதிகளைத் தமிழ் மக்களின் தாயகமாக அரசு அங்கீகரிக்க வேண்டும். தமிழ் மக்களுக்கு பிரதேச சுயாட்சி வழங்கி அவர்களையும் வாழவைக்க அரசு முன்வர வேண்டும்.

தொழிலாளர் தினமான நேற்று நடைபெற்ற மேதினப் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வடபிராந்தியத் தலைவர் திரு. ஏ. கப்பிரமணியம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற மேதினப் பேரணியை அடுத்து யாழ் பஸ்நிலையத்திற்கு அருகாமையில் இக் கூட்டம் நடைபெற்றது.

திரு. கப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:-

வட இலங்கையில் மட்டுமல்ல தென்னிலங்கையிலும், பயங்கரவாதப் பிரச்சினைகள் இருக்கின்றன.

அங்கும் கூட்டங்கள் நடத்த அனுமதி மறுக்கப்படுகிறது. இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

இவற்றிற்கெல்லாம் அரசு உடன் தீர்வு காண வேண்டும். நீதியை நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் மே தின கோஷங்கள்!

கொழும்பு, மே 2

தமிழரின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரி!

வடக்கு - கிழக்கு யுத்தத்தை நிறுத்து!

மேற்கண்ட கோஷங்கள் மக்கள் கட்சி, லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன கூட்டாக நடத்திய மேதின ஊர்வலத்தில் எழுப்பப்பட்டன.

கொழும்பு நகரில் இந்த மேதின ஊர்வலம் நடந்தது.

★ பிணக்கைத் தமிழகத்தில் தீர்க்கலாம்

மோதலை உடன் நிறுத்துங்கள் என்கிறார் எம். ஜி. ஆர்.

சென்னை, மே 1

"பிணக்கை தமிழகத்தில் தீர்த்துக்கொள்ளலாம். மோதலை உடனே நிறுத்துங்கள்"

தமிழ்நாடு முதலமைச்சர் எம். ஜி. ராமச்சந்திரன் யாழ்ப்பாணத்தில் மோதலில் ஈடுபட்டுள்ள இளைஞர் கோஷ்டிகளுக்கு மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று சென்னையில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே எம் ஜி ஆர் இந்த வேண்டுகோளை விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் தடைபெறும் மோதலை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசாங்கம் தமிழ்நாடு அரசாங்கத்தைக் கேட்டிருந்தது.

இதனை அடுத்தே முதலமைச்சர் எம். ஜி. ஆர் நேற்று அவசரமாக பத்திரிகையாளர் மாநாட்டைக் கூட்டி மோதலை நிறுத்தும்படி வேண்டுகோள் விடுத்தார்.

யாழ்ப்பாணத்தில் இரு இளைஞர் குழுக்கள் இடையே மோதல் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். தமிழகத்தில் மக்கள் இதையே விரும்பவில்லை. வேதனை அடைந்துள்ளார்கள் என்று எம். ஜி. ஆர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

பேச்சுவார்த்தையில் எவ்வித மாறுதலையும் எதிர்பார்க்கவில்லை

- கருணாநிதி

சென்னை, மே 1

இலங்கை சென்றுள்ள இந்தியக் குழு இலங்கையில் நடத்தும் பேச்சுவார்த்தைகளில் எவ்வித மாறுதலையும் நான் எதிர்பார்க்கவில்லை.

— இவ்வாறு தி. மு. க. தலைவர் திரு மு. கருணாநிதி கூறினார்.

தமிழ்நாடு ஆதரவாளர் மாநாட்டை சென்னையில் கூட்டுவது குறித்து பேசுகையிலேயே இவ்விதம் அவர் கூறினார்.

இலங்கைப் பிரச்சினையில் தமிழ்நாடு அரசுக்கு மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அக்கறை உண்டு.

இப் பிரச்சினைக்கு இந்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வலியுறுத்தவே இம் மாநாடு கூட்டப்படுகிறது என்றும் திரு. கருணாநிதி கூறினார்.

சரணடைந்தால் பாதுகாப்பு கிடைக்கும் அரசாங்கம் என்கிறது

கொழும்பு மே 2

இரண்டு தீவிரவாதக் குழுக்களுக்கிடையே இடம்பெறும் மோதல்களை காரணமாகத் தமிழ்நாட்டுக்கு ஓடிவந்த ஈழ அகதிகளை சந்தித்துக் கூறி விட்டேன்.

நாடு கலவரக்கு ஆபத்தை எதிர்நோக்கும் தீவிரவாதிகள் சரணடைந்தால் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்படும்.

இப்படி அரசாங்க அதிபர் ஒன்று நேற்றுத் தெரிவித்தது.

தேசிய பாதுகாப்பு அமைச்சினால் விநியோகிக்கப்பட்ட இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுகிறதாவது:-

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அண்மையிலுள்ள இனப்புத் தலைமை அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், இராணுவ முகாம், பாதுகாப்புப் படைப்பிரிவு ஆகியவற்றில் தீவிரவாதிகள் சரணடையலாம்.

இரண்டு தீவிரவாத குழுக்களின் மோதல் காரணமாகக் கூடிய இரண்டு நாட்களில் பலர் உயிர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

கல்வியங்காடு கட்டைப்பிராய் நேற்று அமைதி

யாழ்ப்பாணம், மே 2

கல்வியங்காடு, கட்டைப்பிராய்ப் பகுதிகளில் நேற்று அசம்பாவிதம் எதுவும் நடக்கவில்லை.

ஆனால் இளைஞர் கோஷ்டி ஒன்று வீடு வீடாகச் சோதனை நடத்தியது.

நேற்றும் இரண்டு பகுதிகளிலும் கடைகள் திறக்கப்படவில்லை. சந்தையும் கூடவில்லை. கடந்த இரண்டு தினங்கள் போலவே நேற்றும் பேரூந்துகள் ஓடாமல் நிறுத்தப்பட்டன.

இதே வேளையில் பாலஷுபுர், மல்லாகம் ஆகிய பகுதிகளில் இரண்டு இளைஞர் கோஷ்டிகள் மோதிக்கொண்டன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்த மருத்துவ மாணவர் கண்டனம்

மருத்துவ அலுவலர் நியமனத்துக்கு

யாழ்ப்பாணம், மே 2 கைதடி அரசினர் ஆயுர்வேத வைத்திய சாலையில் டி. ஏ. எம். தராதரம் பெற்ற டாக்டர் ஒருவருக்கு மருத்துவ அலுவலர்பதவி நியமனம் வழங்கியது தவறு எனத்.

யாழ் பல்கலைக்கழகச் சித்த மருத்துவத்துறை மாணவர்கள் மேற்கண்டவாறு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பல்கலைக்கழகத்தில் இருந்த வெளியறிவு டி. ஏ. எம். எனும் தராதரம் பெற்ற டாக்டர்கள் இருந்தும் அவர்களுக்கு நியமனம் வழங்கப்படாதது தவறானதான அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக சித்த மருத்துவ மாணவர் மன்றம் அதேசமயத்தில் அலுவலர்களுக்கும் உயர்கல்வி அமைச்சுக்கும் அவசர தந்தியனுப்பி வைத்துள்ளது

யாழ் மாணவர்கள் புத்தகப் பூச்சிகள் என்கிறார் கல்விப்பணிப்பாளர்

மானிப்பாய், மே. 2.

அண்மையில் வெளியாகிய ஜி. சி. ச பரீட்சைப் பெறுபேறுகள் யாழ் மாவட்டத்தில் கல்வி நிலை வளர்ச்சி அடைந்திருப்பதை வெளிக்காட்டினாலும் அதனை விட்டு பெருமைப்படும் நிலையில் நாம் இல்லை. காரணம் மாணவர்கள் புத்தகப் பூச்சிகளாக இருந்து பரீட்சைக்கு எழுதுகிறார்களே தவிர அவர்களின் வாழ்க்கைக்கான கல்வி புகட்டப்படவதில்லை.

உடுவில் இராமநாதன் கல்லூரியில் நடைபெற்ற அதிபர்கள் ஆசிரியர்களுக்கான ஒன்று கூடல் நிகழ்ச்சியில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு ஆ. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் வட்டாரத்தை சேர்ந்த பாடசாலை அதிபர்கள், விசேஷ பாட ஆசிரியர்கள் கலந்து கொள்ளும் கூட்டம் இராமநாதன்கல்லூரியில் நடைபெற்றது.

மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ் நவஞ்செல்வி ஒழுங்கு செய்த இக் கூட்டத்துக்கு அவிரதலைமை வகித்தார்.

பாடசாலை ரீதியிலும் வட்டார ரீதியிலும் பொருட்காட்சி ஒன்றை நடத்தும் முகமாக இக் கூட்டம் நடைபெற்றது.

ஆங்கிலம், விஞ்ஞானம், கணிதம், வர்த்தகம், கைப்பணி போன்ற விசேஷ ஆசிரியர்கள் நாற்றுக்கணக்கில் சமுகமளித்திருந்தனர். வர்த்தக பாடக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவராசா சித்திர பாடக்கல்வி அதிகாரி திரு. தம்பித்துரை, விஞ்ஞானக்கல்வி அதிகாரி திரு. நடராசா, கைப்பணிக் கல்வி அதிகாரி கப்பிரமணியம் ஆகியோரும் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

யாழ்மாவட்ட கல்வி பொருட்காட்சி

மானிப்பாய், மே. 2

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்விப் பொருட்காட்சி ஒன்றை நடத்த யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களம் முன்வந்துள்ளது

பாடசாலை 'வலயரீதி' மாவட்டம் ஆகிய மூன்று நிலைகளில் இப்பொருட்காட்சி நடைபெறும்.

பாடசாலை மட்டத்தில் ஜூன்மாதம் 30 ஆம் திகதிக்குள் பொருட்காட்சிகள் நடைபெறும்.

வலயரீதியான பொருட்காட்சிகள் செப்டம்பர் மாதம் முதலாம் இரண்டாம் வாரத்தில் நடைபெறும்

மாவட்டப் பொருட்காட்சிகள் செப்டம்பர் மாத இறுதியில் நடைபெறும்.

யாழ் - திருமலை பஸ் சேவை தற்போதைக்கு இல்லை

மேலிடம் உத்தரவு

நல்லூர், மே 2

யாழ் – திருமலை பஸ் சேவையை தற்போதைய குழ்நிலையில் ஆரம்பிக்க வேண்டாம் என மேலிடம் வடபிராந்திய போக்குவரத்துச் சபைக்கு அறிவித்துள்ளது.

கடந்த ஒருவருட காலமாக இந்த பஸ் சேவை நிறுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் பஸ் டிப்போ ஊழியர்கள் திருமலை பஸ் சேவையை ஆரம்பிக்க தயார் நிலையில் உள்ளனர். இருந்தும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அடுத்தே இச்சேவை நிறுத்தப்பட்டுள்ளது.

தற்போது திருகோணமலை செல்லும் பொது மக்கள் கொழும்பு சென்று அங்கிருந்து திருமலை செல்ல வேண்டிய நிலைமை இருந்து வருகிறது

சண்டிலிப்பாயில் சிறுவர் பராமரிப்பு நிலையம் திருச்சபையின் ஆதரவில்

மானிப்பாய், மே. 2.

கோண்விந்திய திருச்சபை யாழ் ஆதீனம்கிழவர் பஸ்டர் பராமரிப்பு நிலையம் ஒன்றை சண்டிலிப்பாயில் ஆரம்பித்துள்ளது

இந்நிலையம் அதிபட்சகர் வண. தோ. டி. ஜே. அம்பலவாணரின் பெரு முயற்சி காரணமாக ஆரம்பிக்கப்பட்டது

இந்நிலையத்தை உதவி ஊழியர் திருமதி ஆர் தம்பிஐயா தலைமையில் வண. பிதா. ஜெயக்குமார் ஆரம்பித்து வைத்தார்

இந்நிலையத்தில் சுமார் நாற்பது பிள்ளைகள் வட்டுக் சந்துணவு வழங்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றனர் என்று திருமதி ஆர் தம்பிஐயா தெரிவித்தார்.

மாநிலம்-மாவட்டம்-உள்ளூர்

கலன் 60 சதத்துக்கு விற்பனை

புங்குடுதீவில் குடிதண்ணீர் திட்டத்தை ஆரம்பிக்குக

யாழ் அரச அதிபரிடம் கோரிக்கை

புங்குடுதீவு, மே 2

புங்குடுதீவில் குடிதண்ணீர் கஷ்டத்தால் அவதியுறும் மக்களுக்கு உதவும் பொருட்டு சமூக சேவைப்பகுதியினர் தாமதமின்றி குடிதண்ணீர் விநியோகத்தை ஆரம்பிக்கவேண்டும்.

இவ்வாறு யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபையின் முன்னாள் உறுப்பினர் திரு வே. க. சோமசுந்தரம் யாழ் அரசாங்க அதிபரைக் கோரியுள்ளார்.

இதுதொடர்பான விரிவான மகஜர் ஒன்றை அவர் பொதுமக்கள் சார்பில் யாழ் அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்தார்.

வேலணை உதவி அரசாங்க அதிபர், யாழ் சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருக்கும் இதுதொடர்பான மகஜர்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

புங்குடுதீவில் குடிதண்ணீர்ப்பஞ்சம் தலைதூக்கியுள்ளது இதனால் பொதுமக்கள் பெரிதும் அவதியுறுகிறார்கள். புங்குடுதீவு மெற்கில் ஒரு கலன் குடிதண்ணீர் 60 சதமாக விற்பனை செய்யப்படுகின்றது.

வேலணை சாட்டியிருந்து தலைக்கு ஒன்று வீதம் கொண்டு வரப்பட்டே இந்த விற்பனை செய்யப்படுகிறது. சமூகசேவைகள் திணைக்களத்தினர் முன்னைய ஆண்டுகளில் இப்பகுதி மக்களுக்கு இலவசமாக குடிதண்ணீர் விநியோகத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஆனால் இதுவரை இலவச குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்படாததனை அடுத்தே இந்த விவகாரம் யாழ் அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது

வாந்திபேதி: பாடசாலைகள் மூடப்பட்டன

கொழும்பு, மே 2

வாந்திபேதி நோய் பரவுவது காரணமாக மாத்தளை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகள் ஒரு வாரத்துக்கு மூடப்பட்டுள்ளன.

அம் மாவட்டத்தில் இதுவரை 21பேர் வாந்திபேதி நோய்காரணமாக இறந்தனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நோயினால் பீடிக்கப்பட்ட 240 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

திடற்புலம் கிராமத்தில் சுகாதார வசதியுள்ள மயானம்

இளைஞர் மன்றம் கோரிக்கை

நல்லூர், மே 2

திடற்புலம் கிராமத்திற்கு சுகாதார வசதியுடன் கூடிய மயானம் ஒன்றை அமைத்துத் தாருங்கள்

இப்படி வயாவிளான் திடற்புலம் இளைஞர் கன்றம் யாழ் அரச அதிபரை வேண்டி நிற்கிறார்கள்

அக் கடிதத்தின் விவரம் வருமாறு

திடற்புலம் கிராமத்தைச் சுற்றி மூன்று மயானங்கள் இருக்கின்றன.

இதில் ஒன்று 1969 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டகுடியேற்றத்திட்டவீடுகளின் நடுவே உள்ளது.

இந்த மயானத்தை புங்குடுதீவுப் பகுதியில் உள்ள ஒரு சில மக்களே பயன்படுத்தி வருகின்றனர்.

வேறு இரு மயானங்கள் அருகருகே இருந்தும் அம் மயானங்களை பயன்படுத்தாது வீதியின் அருகே உள்ள மயானத்தைப் பயன்படுத்துவதால் சங்கடங்களும் ஏற்படுகின்றன.

எனவே இந்த மயானத்தை ஏனைய இரண்டில் ஒன்றுடன் இணைத்து இப்பகுதி மக்களை வாழ விடும்படி இம் மன்றம் கேட்டுள்ளது.

இப்படிக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

மல்லாகம் இளைஞர் கழகம் வேலைத்தள கட்டட தொகுதியை தம்மிடம் ஒப்படைக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 2

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வேலைத்தள கட்டடத்தை தங்களிடம் ஒப்படைக்கு மாறு மல்லாகம் இளைஞர் கழகம் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது.

இது சம்பந்தமாக அரசாங்க அதிபருக்கு இளைஞர் கழகத்தால் அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது

மல்லாகத்தில் இயங்கி வந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் வேலைத்தளம், அண்மையில் நடந்த கொள்ளை காரணமாக மூடப்பட்டுள்ளது.

தேசிய இளைஞர் சேவை மன்றம், பாடசாலையை விட்டு விலகும் மாணவருக்கு, உள்ளூர் மூலப் பொருட்களைப் பாவித்து தொழிற்கல்வி வகுப்புக்கள் நடத்திவருகின்றது

மேற்படி வகுப்புக்களை நடத்தவும், உற்பத்தி செய்யும் பொருள்களை விற்பதற்கான ஒரு விற்பனை நிலையமாக பாவிப்பதற்கும் இக் கட்டடத்தைப் பயன்படுத்த இளைஞர் கழகம் விரும்புகிறது

இப்படி மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தெல்லிப்பளையில் தந்தை செல்வா நினைவு தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 2

தந்தைசெல்வா நினைவு தினக் கூட்டமொன்று, தெல்லிப்பழை ப. நோ. கூ சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது.

நாளை 3ஆம் திகதி சனிக்கிழமை 9-30 மணிக்கு தெல்லிப்பளை ப. நோ. கூ சங்கத் தலைவர் சி. வெலாயுதராசா தலைமையில் கூட்டம் நடைபெறும்.

பேராசிரியர் வ. ஆறுமுகம் 'தமிழ் விழிப்புணர்ச்சியும் தந்தையும்' என்னும் பொருள் பற்றியும், பேராசிரியர் கலாநிதி க. சிற்றம்பலம் "தந்தையும் தமிழ் தேசியமும்" என்னும் பொருள் பற்றியும் நினைவுப் பேருரைகள் நிகழ்த்துவார்கள்.

கதைக்கு முதன்மை தரும் இயக்குனர் பாஸ்கர்

தமிழ்த் திரையுலகில் வெற்றி இயக்குனர்களில் பாஸ்கரும் ஒருவர் இவர் இயக்குனர் மாத்திரமல்ல, தயாரிப்பாளர்– கதை வசனகர்த்தாவும் கூட.

அந்தி பூக்கிறாற் போல எப்போதாவது ஒரு படத்தைத் தந்தாலும், இவரது படங்கள் தரமானவையே.

பாஸ்கர் சொல்கிறார்.

"நான் ஸ்ரீதரிடம் பதினான்கு வருடங்கள் இணைந்து பணியாற்றினேன். அவரது 'கொடி மணி'யிருந்து 'வைர நெஞ்சம்' வரை உடனிருந்து பணியாற்றினேன்.

அதற்குப் பின்னர் நான் தனித்து இயக்கிய முதல் படம் 'வைரம்'. இதில் நான் ரஜனிகாந்த் முதன் முதலாக கதாநாயகனாக நடித்தார்.

இந்தப் படத்திலிருந்தும் நான் கலைஞானம் தயாரிப்பாளராகி விட்டேன். மூவருக்கும் முதன்மை தந்த பெருமை இந்தப் படத்திற்கு உண்டு.

இதைஅடுத்து எனது சொந்தப் பட நிறுவனத்தை 'ஆகாவார் மூவி' என்று ஆரம்பித்து, முதன் முதலில் 'சூலம்' என்ற படத்தை வர்த்தக ரீதியாக செய்தேன். ஆனால் அது எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை.

பின்னர் முற்றிலும் கதைக்கு முக்கியத்துவம் கொடுத்து 'நீர்ப்புகா நிருத்தப்படலாம்' 'தண்டிக்கப்பட்ட நியாயங்கள்', 'பெனர்ணமி அலைகள்' போன்ற படங்களை இயக்கினேன்.

அப்படங்கள் நான் எதிர்பார்த்ததைவிட, பெரும் வரவேற்பைப் பெற்றன. அதற்கிடையே வெற்றி என்னை இத்துறையில் மேலும் ஊக்கப்படுத்தியது.



நான் படத்திற்கான கதையை தெரிவு செய்வதில் விசேஷ கவனம் எடுக்கிறேன் இளைஞர் மாணவர்களுக்கு கதை எழுதுகிறோம் என்ற எண்ணம் எழாதவாறு ஒரு பத்திரிகைக்கு எழுதும் நேர்த்தியுடன் செய்கிறேன். அதையே படமாகச் செய்கிறேன்.

காய்ச்சறியை வைத்துக் கொண்டு என்ன குழம்பு வைக்கலாம் என யோசிப்பவர்கள் மத்தியில், செய்யப் போகின்ற குழம்புக்கு காய்கறிகளைத் தேடுபவன் நான்" என்றார்

நினைவு மலர் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம் மே 2

"ஆமரர் சாமுவேல் இராமானுவேல் யோசப் இறைவனில் நிலைத்திருந்தார். ஆகவே தன்சேவையைத் திறமையாக இறுதி வரை செய்தார்"

யாழ் அமலவிழி நியாகிகளின் தலைவர் கலாநிதி லூயிஸ் டொக்கினர அடிகளார் அமரர் யோசப்பின் நினைவுமலர் வெளியீட்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கடந்த பல ஆண்டுகளாக பொதுப்பணியிலும் திருமறைப்பணியிலும் அயராதுழைத்து அண்மையில் அமரரான சா. இ. யோசப்பின் பணிகட்கு நன்றி செலுத்த யாழ் கண்டி குளி திருமுழுக்கு அருளபர் ஆலயமுற்றலில் நடைபெற்ற இவ்விழாவுக்கு பங்குத்தந்தை அருள்திரு இராயோசப் அடிகளார் தலைமை வகித்தார்.

இதயங்கள் சேகிக்கின்றன என்ற புதுக்விதை செல்வி சுவர்ணலியோ எதிர்மனிதிபால் படிக்கப்பட்டது.

ஆறு பேர் கைதாகி விடுதலை

வவுனியாவில் நேற்று முன்தினம் சீருடையினர் சோதனை சென்றபோது ஆறுபேரைக் கைது செய்தனர்

வவுனியா முகாமில் இருந்து தடைபலவியாக வும் வாகனங்களிலும் சோதனை வந்த சீருடையினர் வீதிகளில் நின்ற ஆறு இளைஞர்களை கைது செய்து முகாமிற்கு அழைத்துச் சென்றனர்.

பின்னர் அன்றுமாலையே இவர்கள் ஆறுபேரும் விடுதலை செய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது.

பேரவை உதவி

திருகோணமலை, மே 2

கந்தளாய் குள அகிலைக்கட்டு உவடப்பில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு திருகோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை பொருள்களை வழங்கி உதவுகிறது,

தமிழ் அகதிகளுக்கு பொருளுதவிசெய்ய முன் வருமாறு பேரவை வேண்டுகோள் ஒன்றையும் விடுத்துள்ளது.

நேற்று ஒரு லொறி நிறைந்த உணவுப் பொருள்களை பேரவை கந்தளாய்க்கு அனுப்பியது. பேரவைத் தொண்டர்கள் கந்தளாயில் முகாமிட்டு பொருள்களை அகதிகளுக்கு விநியோகித்தனர்.

தீவுப் பகுதியில் அடிக்கடி மின்வெட்டு!

மக்களின் வாழ்க்கைபாதிப்பு

ஊர்காவற்றுறை, மே 2

தீவுப்பகுதியை உள்ளடக்கிய ஊர்காவற்றுறை நாரந்தனை, அனலைதீவு, புலியங்கூடல், வேலணை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் தொடர்ச்சியான மின்வெட்டு ஏற்படுவதை விட்டு மின்பாவனையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

வாரத்தில் நான்கு நாட்கள் மின் விநியோகம் தடைப்படுவதனால் இப்பகுதி மக்களின் அன்றாட வாழ்க்கை பலவகையாலும் பாதிக்கப்படுகின்றது.

இது பற்றி பொறுப்பான அதிகாரி ஒருவரிடம் கேட்ட போது அவர் மேலும் கூறியவாறு தகவல் தெரிவித்தார்:–

தீவுப்பகுதிக்கான மின் விநியோகம் கம்பிகள் காரணமாகக் கடலூடே கொடுக்கப்பட்டுள்ளன கடலுக்கு மேலாக வரும் இக்கம்பிகளின் முக்கிய சாதனங்கள் காரைநகர் கடற்படை முகாமிற்கு அருகிலேயே இணைக்கப்பட்டுள்ளன:

இதனால் அச்சாதனங்களை சீராக இயங்குவதில் உள்ள தடை காரணமாக தொடர்ச்சியான மின்வெட்டு இடம்பெறுவது தவிர்க்க முடியாமலுள்ளது.

திருத்த வேலைகளை செய்ய மேற்குறிப்பிட்ட இடத்திற்கு சென்ற அச்சம் காரணமாக மின் பணியாளர்கள் பின் நிற்பதால் இறுக்கமான முறையில் மின் இணைப்புக்கள் செய்யமுடியாமல் உள்ளது

ஏணி போன்ற உபகரணங்களை பிரயோகிக்கக் கொண்டு செல்ல முடியாக இருப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும். இப்படி அவர் தெரிவித்தார்.

மக்கள் முகம்

யாழ் மத்திய கல்லூரி மேலதிக பிரதி அதிபர்

யாழ் மத்திய கல்லூரியின் மேலதிக பிரதி அதிபராக நியமனம் பெற்ற திரு கே. கந்தசாமி இக் கல்லூரியின் பெருமைமிக்க முன்னாள் மாணவர்களில் ஒருவர்.

திரு கந்தசாமி 1943 இல் இருந்து முதலில் கல்லூரி மாணவராகவும் அடுத்த எழுதுவினைஞராகவும் பின்னர் பகுதி நேர ஆசிரியராகவும் பணியாற்றினார்.

நிரந்தர வர்த்தக ஆசிரிய பதவியைப் பொறுப்பேற்று மேலதிக பிரதி அதிபர் பதவிக்கு தற்போது உயர்வு பெற்றுள்ளார்.

வடமாகாண ஆசிரியர் சங்க பரீட்சைக் குழுத் தலைவராக கடமை ஆற்றி இலங்கை ஆசிரியர் சங்கத்திலும், அதன் கிளையான யாழ்நகர் ஆசிரியர் சங்கத்திலும் பல பதவிகளை வகித்து ஆசிரியர் சேமநலத்திற்கும், தொழிற்சங்க வளர்ச்சிக்கும் உதவினார்.

திரு. கந்தசாமி பரீட்சைகளை நடத்துவதில் அனுபவம் பெற்றவர் என்ற வகையில் கல்லூரியில் சகல பரீட்சைகளுக்கும் பொறுப்பாசிரியராக விருந்து செயலாற்றி வருகிறார்.

இவரின் சிறப்பியல்பு பாரதூரமான சகல துறைகளிலும் இவர் காட்டும் ஈடுபாடே.

பேர்சிவல் இல்ல சிரேஷ்ட ஆசிரியர், கிளை யாட்டுக் குழு உறுப்பினர், பழைய மாணவர் சங்க உபசெயலாளர், யாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர், ஆசிரியர் கல்விப் பொருளாளர், தலைவர், கட்டுறுவுச் சிக்கனக் கடன் சங்கத்தின் தலைவர் — இப்படியான பதவிகளில் இவர் கல்லூரியின் வளர்ச்சிக்கு உதவியுள்ளார்.

இவரின் ஆற்றல் கண்டு 1982 இல் இவருக்குக் கல்லூரியின் பிரிவுத் தலைவர் நியமனம் வழங்கப்பட்டது.

இவர் பெற்ற மேலதிக பிரதி அதிபர் பதவி உயர்வாக கல்லூரிக்குப் பெரும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை

–பழைய மாணவன்–

கல்முனையில் அடிக்கடி தேடுதல்

கல்முனை, மே 2

பொலிஸ் கமாண்டோக்கள் தனிகாரி வாகனங்களில் வந்து கல்முனைப் பகுதியில் 2ஆம் 3ஆம் குறிச்சிகளில் அடிக்கடி தேடுதல் நடத்தினர்.

அண்மையில் பானை வெட்டுவாள் சந்தியில் உள்ள கராஜ் ஒன்றில் வேலை செய்து கொண்டு இருந்த தமிழ் இளைஞர் ஒருவரை பொலிஸ் கமாண்டோக்கள் கைது செய்தனர்.

ஜெகோவா சாட்சிகளின் மாநாடு

வாழ்ப்பாணம், மே 2

ஜெகோவா சாட்சிகளின் தமிழ் வட்டார மாநாடு 3 ஆம் 4 ஆம் திகதிகளில் சாவகச்சேரி பொம்புலம் வீதி, பெரிய மாவடியில் உள்ள ராஜ்ய மண்டபத்தில் நடைபெறும்.

"உலகளாவிய சகோதரத்துவத்திற்கான அன்பு, என்பதே மாநாட்டுக் பொருளாக இருக்கும்.

நிகழ்ச்சிகள், காலை 9 மணிக்கும், ஞாயிற்றுக் கிழமை காலை 8-30 மணிக்கும் ஆரம்பமாகும்.

ஞாயிற்றுக்கிழமை நிகழ்ச்சிகளின் உச்சக் கட்டமாக, அன்று காலை 10-30 மணிக்கு "போராடத்திக் இருந்து காப்பாற்றப்பட்ட ஒரு உலகம்" என்ற தலைப்பில் பகிரங்க உரை நிகழ்த்தப்படும்.

அதேவேளையில் எமது [illegible] நிகழ்த்துகொண்டிருக்கும் விநாடிப் போராட்டக் களங்களில் நின்று இக் கெடு படைக்கும் போராளிகளின் வெளியீடுகள் தற்காலத்து முதல் நூல்களாக கருதப்படவேண்டிய அவசியம் உள்ளது

இவ்வாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்க யாழ்கிளையினரால் நடத்தப்பட்ட எழுத்தாளர் டானியலின் நினைவுக் கூட்டத்தில் உரையாற்றிய கவிஞரும், யாழ் மக்களிக்கழக மேனாள் [illegible] ஆசிரியருமான [illegible] கூறினார்.

போராளிகளின் வெளியீடுகளே தற்காலத்து முதல் நூல்கள்

"மறைந்த டானியல் சாதி அடக்குமுறைக் கெதிராக இலக்கியம் படைப்பதில் முன்னின்ற அதே வேளையில் போராட்டக் களத்தினின்று நின்று சமர் புரிந்தார் இலக்கிய வாதியாகவும் இயக்க வாதியாகவும் திகழ்ந்த அவரது நூல்கள் தற்காலத்து போராளிகளின் இலக்கிய நூல்களைப் போல முதல் நூல்களாக கணிக்கப்பட வேண்டியவையாகும்.

பேற்ற இக் கூட்டத்தில் அவர் மேலும் உரையாற்றுகையில்:

"மறைந்த டானியல் சாதி அடக்குமுறைக் கெதிராக இலக்கியம் படைப்பதில் முன்னின்ற அதே வேளையில் போராட்டக் களத்தினின்று நின்று சமர் புரிந்தார் இலக்கிய வாதியாகவும் இயக்க வாதியாகவும் திகழ்ந்த அவரது நூல்கள் தற்காலத்து போராளிகளின் இலக்கிய நூல்களைப் போல முதல் நூல்களாக கணிக்கப்பட வேண்டியவையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

பிறர் உனக்கு என்ன செய்ய வேண்டும் என்று விரும்பு கிறாயோ அதை நீ அவர்களுக்குச் செய்.
உனக்கு பிறர் என்ன செய்யக் கூடாது என்று விரும்பு கிறாயோ அதை நீ அவர்களுக்குச் செய்யாதே:
-- யேசுநாதர்:

உதயன்

விடுதலை - அறிவாயுதம் - தமிழ்த்தினம்

இல. 15, 2வது ஒழுங்கை கல்லூரி வீதி, யாழ்ப்பாணம். 02-05-86

தொலைபேசி: 24805 22173 த. பெ. 28

கிழக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வேண்டும்

கிழக்கில் நெற்செய்கை பாதிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. நெற்செய்கையில் ஈடுபடுவதா அல்லது விடுவதா என்ற இரண்டுங் கெட்டான் நிலையில் மட்டக்களப்பு விவசாயிகள் திண்டாடுவதாக அங்கிருந்து வந்த செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

இந்த நிலைமைக்குக் காரணம் ஆயுதப்படையினரின் நடவடிக்கைகள் என்றே சொல்லப்படுகிறது. வயல் வெளிகளிலும் படையினர் தேடுதல் நடத்தக்கூடியிருக்கிறார்கள். அப்போது அங்கு வேலை செய்யும் தொழிலாளர்களும் பயங்கரவாதச் சந்தேக நபர்களாகக் கைது செய்யப்படுகிறார்கள். சில வேளைகளில் வயல் வேலை செய்வோர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகும் ஆபத்தும் உண்டு.

இத்தகைய சூழ்நிலையில் மட்டக்களப்புப் பகுதி விவசாயிகள் வேளாண்மையில் ஈடுபட அஞ்சுவதில் வியப்பு ஒன்றுமில்லை.

அந்த அச்சத்தின் விளைவாக பெரும் போகத்தில் விளைவிக்கப்பட்ட நெல்லில் பெரும் பகுதி அறுவடை செய்யப்படாமலே விளைந்து வீணாகியது. காலபோகம் செய்வதற்கும் இதுவரை எவ்வித ஆயத்தமும் நடக்கவில்லை.

வயல் வெளிக்குச் சென்றால் என்ன நடக்குமோ என்ற பீதியால் வேளாண்மையை நினைத்தும் பார்க்க முடியாமல் செயலற்று இருக்கிறார்கள் விவசாயிகள்.

தமிழ்ப் பிரதேசங்களில் அதிக நெல் உற்பத்தி செய்யப்படும் பிரதேசங்கள் மட்டக்களப்பும் மன்னாரும் ஆகும்.

அங்கு வேளாண்மை தடைப்பட்டால் தமிழ்ப் பகுதிகளில் வேளாண்மை தடைப்படுவதற்குச் சமம். அதில் இலங்கையின் நெல் உற்பத்தியும் குறைந்ததற்குச் சமம்.

நெல் உற்பத்தியில் தன்னிறைவு கண்டுவிட்டதாகவும் அரிசி ஏற்றுமதி செய்யப் போவதாகவும் அரசாங்கம் இரண்டொரு வருடங்களுக்கு முன் பெரிதாகப் பிரகடனப்படுத்தியிருந்தது.

ஆனால் இப்போது அரிசி இறக்குமதிக்கு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட வேண்டிய நிலைமை ஏற்பட்டிருப்பதாக நிதி அமைச்சர் பரிதாபமாகத் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக மன்னார், மட்டக்களப்பில் வேளாண்மை பாதிக்கப்பட்டதாலேயே அந்த நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டும்.

அரசாங்கத்துக்கும் இது நிச்சயம் தெரிந்திருக்கும். அப்படி இருந்தும் வடக்கு - கிழக்கில் வேளாண்மையைப் பாதிக்கும் அவலுக்கு அது இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இது எதனைக் காட்டுகிறது? நாட்டின் விவசாயத்தைவிட — பொருளாதாரத்தைவிட — அரசுக்கு இராணுவ நடவடிக்கையில் தான் நாட்டம் கூட. அதில் அரசுக்கு ஒரு "பித்து" என்று சொல்லலாம்.

மட்டக்கு, கிழக்கின் பொருளாதாரத்தை நசுக்குவதும் இதன் மறைமுக நோக்கம். "தனக்கு மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழை" வந்தால் போதும் என்ற போக்கில் அரசு நடந்து கொள்கிறது.

அதனை அரசு மறுப்பதாயின் தமிழ்ப் பகுதிகளில் உள்ள விவசாயிகள், தொழிலாளர் அச்சமின்றித் தமது வேலைகளைச் செய்யக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் வயல் வெளிகளிலும் வேலை இடங்களிலும் தேடுதல், கைது என்ற "கைங்கரியங்களை" நிறுத்த வேண்டும்.

அது மட்டுமன்றி இவரை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும். தமிழ்ப்பகுதி விவசாயிகள் தொழிலாளர்களின் ஜீவனோபாயம் தடைப்பட்டதற்கு அரசே பொறுப்பு அதனால் அரசு அவர்களுக்கும் இரட்டிப்பு நிவாரண வசதி செய்தாக வேண்டும்.

தம்பசிட்டி மக்கள் அனுபவம் பற்றி ஜனாதிபதியிடம் முறையீடு

யாழ்ப்பாணம், மே 2

வான், கடல் தாக்குதல்களுக்கு ஆளாகியுள்ள தம்பசிட்டி கிராம மக்கள் எதிர்நோக்கியுள்ள அபாயகரமான நிலைமை பற்றி ஜனாதிபதியின் கவனத்துக்கு பகுத்தித் துறைப் பிரஜைகள் குழு கொண்டுவந்துள்ளது.

குழுத் தலைவர் சோரசியர் வி. கே. சிவஞானம் ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் கூறியுள்ளதாவது:

86 – 4 – 86 தம்பசிட்டி மக்கள் பயங்கரநிலை ஒன்றை அனுபவித்தார்கள்.

அன்று காலை 10 மணி முதல் பிற்பகல் 5 30 மணிவரை வெடிச்சத்தங்கள் பகுத்தித்துறை மற்றும் அயல் கிராமங்களைக் கலக்கின.

இந்த வெடிச்சத்தங்கள் பகுத்தித்துறை ஆயுத முனையம் பக்கமாக இருந்து வரவில்லை என்பது தெளிவு.

இதனால் ஏற்படக்கூடிய அதிர்ச்சியில் ஆம்வாப்பிள்ளை துரைராஜா என்ற மீனவர் மனைவியையும் ஆறு குழந்தைகளையும் தவிக்கவிட்டு மரணமானார்.

நடேசன் என்ற தச்சுத் தொழிலாளியின் வயிற்றைத் துளைத்துக் கொண்டு வெடி தாக்கியது.

தம்பசிட்டி, சனநெருக்கடி மிகுந்த கிராமம். விவசாயத்தை நம்பி வாழ்பவர்கள் கிராமமக்கள் அவர்கள் கடலுக்குப் பயந்தவர்கள்.

இப்படியான பயங்கர ஆயுதங்கள் மீண்டும் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளும்படி மனித இனத்துக்கு பேராசை தரக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

இப்படி மகஜரில் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

'காலிஸ்தான்' கதை முடிந்தது

பிரகடனக் குழுவினரும் கைது செய்யப்பட்டதாக அறிவிப்பு

சண்டிகார், மே. 1

அமிர்தசரஸ் பொற்கோயிலில் பாரதப் படையினர் தமது வேலைகளை முடித்துக்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பஞ்சாப்பில் 'காலிஸ்தான்' பிரகடன குழுவினரைக் கைது செய்யும் முயற்சியில் பொலீஸ், இராணுவ பாரா - இராணுவ பிரிவுகள் ஈடுபடுத்தப்பட்டன.

இந்த முற்றுகையின் போது காலிஸ்தான் பிரகடன சீக்கிய நெறிக்கள் குழுவினர் என்று கருதிக்கொண்ட பலரும் கைது செய்யப்பட்டு விட்டதாகவும் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

முற்றுகைச் சம்பவத்தில் சிலருக்குக் காயம் ஏற்பட்டதெனவும் ஒருவர் இறந்ததாகவும் செய்திகளில் தெரிவிக்கப்பட்டது.

மத்திய உள்துறை அமைச்சர் நரசிம்மராவ் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

வருங்காலத்தில் புவிதலங்களுக்கு மாசு ஏற்படுத்தும் நடவடிக்கைகளுக்கு எதிராக கடுமையான போக்கு கடைப்பிடிக்கப்படும்.

பொற்கோயிலின் நிர்வாக அமைப்பான சிரோமணி குருத்துவாரின் பிரபந்த சட்டத்திலும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

பஞ்சாப் மாநில அரசு தான் இந்தத் திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

லிபியா மீதான அமெரிக்க தாக்குதல் அவசியமானது

றேகன் நியாயப்படுத்தல்

ஹொனலுலு மே 1

லிபியா மீது அமெரிக்கா நடத்திய தாக்குதல் அவசியமானதும் அவசரமானதும் ஆகும்.

இவ்வாறு ஜனாதிபதி றேகன் தெரிவித்தார்.

ஹொனலுலுவில் பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதில் விடுத்த போதே றேகன் அவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து அங்கு பதிவிடுத்துப் பேசுகையில்;

பயங்கரவாதத் தாக்குதல்களை மேற்கொள்ளும் லிபியாவின் ஆற்றலை முறியடிக்க வேண்டும்.

அப்படியான தாக்குதல்களை அந்த நாடு தொடர்ந்து மேற்கொள்வதையும் தடுக்க வேண்டும்.

இந்தக் கருத்துடன் தான் லிபியா மீதான தாக்குதல் திட்டமிடப்பட்டது என்றார்.

ஆப்கான் அதிபர் கர்மால் இப்பொழுது கேள்விக்குறி

செல்வாக்கு இழந்துள்ளதாக கருத்து

இஸ்லாமாபாத் மே 1

ஆப்கானிஸ்தான் ஜனாதிபதி பாப்ராக்கர்மால் பற்றி பல கேள்விகள் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

ஆப்கானிஸ்தானில் அண்மையில் நடந்த முக்கிய அணிவகுப்பொன்றில் அவர் கலந்து கொள்ளாததே இந்தக் கேள்விகளுக்கான காரணமாகத் தெரியவருகிறது.

பாப்ராக்கர் மாலிக் போர்க்குணம் ரஷ்யா திரு நிப்படுகிறது என்றும் பிராவ்தா விமர்சனம் அதைக் கோடிட்டுக் காட்டுவதாகவும் மேலும் கூறப்படுகிறது.

கர்மால் வெளிப்படாதிருக்குக் காரணம் உண்மையிலேயே அவர் சுகவீனமா அல்லது செல்வாக்கு இழப்பா என்பது இன்னும் தெரியவில்லை.

ஜனாதிபதி கர்மாலின் இடத்துக்கு பிரதமர் சுல்ராக் அலி கிஷ்மன்ட் பாதுகாப்பு படைகளின் முதல்வர் ஆகியோரின் பெயர்கள் அடிபடுகின்றன.

ஆஸி - பத்திரிகையாளர் வரக் கூடாது

அனுமதிக்கவும் மாட்டோம் என்கிறது இந்தோனேசியா

லண்டன், மே 1

அவுஸ்திரேலிய பத்திரிகையாளர்களுக்கு இந்தோனேஷிய அரசு நாட்டுக்குள் வர அனுமதி மறுத்துள்ளது.

பிரிதோனேஷிய ஜனாதிபதி தொடர்பாக பல இரகசியத் தகவல்களைத் தெரிவிக்கும் வகையான கட்டுரை ஒன்று அவுஸ்திரேலியப் பத்திரிகையில் வெளிவரவே இதற்குக் காரணம் என்கூறப்படுகிறது.

கடந்த 20 ஆண்டு காலத்தில் ஜனாதிபதி சுகார்தோவும் அவரது குடும்பத்தினரும் பெருந் தொகையான சொத்துக்களைச் சேர்த்துவிட்டனர்.

200 கோடி டாலர்கள் பெறுமதிக்கும் கூடுதலாகும் அந்தச் சொத்துக்கள்.

இவ்வாறு பல தகவல்கள் அந்தக் கட்டுரையில் வெளியாகியுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

அணுஉலை விபத்து அபாயம் தணிவு

மொஸ்கோ, மே 1

ரஷ்யாவில் நேர்ந்த அணு உலை விபத்து அபாயம் தணிந்து விட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

அணுக்கதிர்வீச்சு, நச்சு வாயு பரவல் போன்ற ஆபத்துக்கள் ஏற்படாத என மேற்கு ஜேர்மனி வியன்னா ரஷ்ய தூதரக அதிகாரி தெரிவித்துள்ளார். எனினும் அணு உலையில் பிடித்துள்ள தீ இன்னும் எரிந்துகொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த இடத்துக்கு அண்மையில் வாழ்ந்த பெருந் தொகையானோர் இறந்திருக்கலாம் என்றும் அஞ்சப்படுகிறது.

போலந்து உறவு

டெல்அவிவ், மே 1

இஸ்ரவேலுடன் போலந்தும் இராஜதந்திரத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள இணங்கியுள்ளன.

வெகுவிரைவில் இரு நாடுகளும் தமது இராஜதந்திரத்தூதரக அதிகாரிகளை பரஸ்பரம் நியமிக்கலாம் என நம்பப்படுகிறது

வெளி உலகில்

சிரோமணி

பிறன் பொருளான் பெட்டொழுகும்
பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்.

பொருள்:

பிறனுடைய உரிமையாகிய மனைவியை விரும்பி நடக்கும் அறியாமை, உலகில் அறமும் பொருளும் ஆராய்ந்து கண்டவரிடம் இல்லை.

திருநின்ற செம்மையே

செம்மையாகக் கொண்ட அப்பர்

நாளை அவரது குருபூஜை

திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரிலே, புகழனாருக்கும் மாதினியாருக்கும் புத்திரராக அவதரித்தவர் மருள் நீக்கியார்.

மருள் நீக்கியார் என்ற பெயரே அவர் மருள் நீங்கி அருள் செய்ய அவதரித்தவர் என்பதை அறிவுறுத்தும் நிலைமையானது.

சூலைநோய் நீங்கியது; தேவாரம்பாடும் திறன் ஏற்பட்டது நாவுக்கரசன் என்று நம்பன் நாமகரணம் சூட்டினார்.

திருநின்ற செம்மையே செம்மையாகக் கொண்டவர் திருநாவுக்கரசர். அவர் ஆண்டிக் முதிர்ந்தவர். கருவிழுந்த நெஞ்சினர் அஃதின்மை

- பரமேஸ்வரி சிவராமலிங்கம் -

ரின் பிள்ளைப்பிறந்தவர் மருள் நீக்கியார்.

தந்தை, தாயரை இழந்து தமக்கையாரின் தயவில் வாழ்ந்த மருள் நீக்கியாரை சமணநெறி தன் பக்கம் ஈர்த்தது சமண சாத்திரங்களைப் பயின்று பண்டிதராகி தருமசேனர் எனப் பெயர் பெற்றார்.

'தம்பியர் உளராக வேண்டும்', என்று தன் வாழ்வைத் தவ வாழ்வாக்கொண்ட தமக்கையாருக்கு இது பெரும் தலைவிடியாயிற்று. தம்பியை மீட்டுத் தரும்படி தயாநிதியான இறைவனின் தாள் தவறாமல் வணங்கினார்.

அவர் விண்ணப்பம் வீண்போகவில்லை. சூலை நோயால் ஆலைக் கரும்பென அவஸ்தைப்பட்ட மருள்நீக்கியார், பாவத்தீக்கு வெண்ணிற ஆடை தரித்த, காலை வேளையில் தமக்கையாரை வந்தடைந்தார்.

தம்பியின் நிலைகண்டு வெம்பியிருந்த நிலையிலேயே நமது எழிட்ட சம்பிரதாய திருவதிகை வீரட்டானேஸ்வரர் திருக்கோயிலுக்கு அவரை அழைத்துச் சென்றார். மருள்நீக்கியார் பெருவலியாம் சூலை நோயை நீக்கும்படி தருநலம்மிக்க வீரட்டானேஸ்வரரை உருகி வழிபட்டார்.

வாதித்த காசு பெற்று பதிப்பிணி தீர்த்தவர். தனது பெயரி மற்றவர்கள் இருந்த ஒரேயொரு நாயனார் இவரே.

அற்புதங்கள்பலசெய்த அப்பர் இறுதியாக திருப்புகலூரை அடைந்து பதிகங்கள் பாடி உழவாரத் தொண்டு செய்து கொண்டு இருக்கும் நாளில் இறுதி உலகப் பற்றற்ற துறவு சிவஞான நிலையை உலகிற்கு உணர்த்தக்கருதி புண்ணியங்களைச் செதுக்கு மிடமெல்லாம் பொன்னும் நவரத்தினங்களும் தோன்றச் செய்தான் இறைவன்.

அப்பர் அவற்றைச் சாதாரண பருக்கைக் கற்களாகவே கருதி உழவாரத்தால் ஏந்தி வீசி எறிந்தார். ஓம் சிவபொன்னு ஓக்கவேறாக்குவார் என்பதற்கேற்றது இச்செயல். மண், பெண், பொன் என்ற மூவாசைகளையும் துறந்தவர் அப்பர். அவர் கருத்தினின்படி திருப்புகலூர் இறைவன் அவருக்கு முத்திப் பேறை கொடுத்தருளினார்.

இவர் தமது எண்பத்தொராம் வயதில், சித்திரைச் சதய நட்சத்திரத்தில் புண்ணியா உன்னடிக்கே போதுகின்றேன் என்று பாடி முத்திப் பேறடைந்தார்.

ஞானக்கதிர்

வாசகர் திருமுகம்

இந்துசமய மாணவருக்கு ஏன் இந்தப் பாகுபாடு?

தமிழ்மொழிமூலம் கல்வி பயிலும் மாணவர்களுக்கு ஜீ.சி.ஈ சாதாரணதர வகுப்பு வரை இந்து சமயத்தை ஒரு பாடமாகக் கற்கமுடியாத நிலை உள்ளது. பௌத்தம், இஸ்லாம், றோமன் கத்தோலிக்கம், கிறிஸ்தவம் ஆகிய சமய பாடங்களை ஆரம்பம் முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ்மொழி மூலம் பயில வழி வகுக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்து சமயத்தைச் சார்ந்த தமிழ் மாணவர்கள் பௌத்தம், இஸ்லாம் கிறிஸ்தவ சமயம் அல்லது சைவசமயம் என்று வகுக்கப்பட்டுள்ள பாடத்தைத் தமிழ் மொழி மூலம் பயிலலாம்.

கிங்கள, ஆங்கில மொழிமூலம் பயிலும் மாணவர்களுக்கு இந்து சமயத்தைப் பாடமாக வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை பயிலச் சந்தர்ப்பம் உண்டு

ஆனால், இந்துசமயத்தைச் சார்ந்த தமிழ் மாணவர்கள் பிறசமயங்களைச் சார்ந்த பாடங்களைக் கற்க வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை பயில வேண்டும். அல்லது பாடமாக வகுப்பு முதல் ஜீ.சி.ஈ. சாதாரணதர வகுப்பு வரை சைவ சமயத்தையும், ஜீ.சி.ஈ. உயர்தர வகுப்பு, மற்றும் பல்கலைக்கழகங்களில் இந்துசமயம், இந்து நாகரிகத்தை ஒரு பாடமாகப் பயிலவேண்டும்.

இந்துசமயத்தைச் சார்ந்த தமிழ் மாணவர்களுக்கு மட்டும் ஏன் இந்தப்பாகுபாடு? தமிழ் மாணவர்கள் பாடவகுப்பு முதல் இந்து சமயத்தை ஒரு பாடமாகக் கொள்வதில் தடை ஏன்?

இலங்கையில் உள்ள தமிழர்கள் இந்துக்களில்லை அவர்கள் சைவம், மற்றும் பிறசமயங்களைச் சார்ந்தவர்கள் என்று உலக அரங்கில் தவிலமப்படுத்தித் தனித்துவம் பேண எடுக்கப்பட்ட நடவடிக்கையா?

இந்த நாட்டின் சனத்தொகையில் 17 லட்சம் பேர் இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழர்கள். உலகிலுள்ள 85 கோடி இந்துக்களுடன் சமயரீதியாகத் தொடர்புபட்டவர்கள் இந்நிலையை மாற்றமடையச் செய்வதற்குத் தற்போதைய சமயபாடக்கல்வி வழிவகுத்து விடும் என அஞ்சப்படுகின்றது.

எனவே நாட்டிலுள்ள இந்துமத அமைப்புகளும் சமயப் பெரியார்களும் இந்து சமயத்தைச் சார்ந்த தமிழ் மாணவர்கள் ஆரம்பம் முதல் பல்கலைக்கழகம் வரை இந்து சமயத்தைப் பயில வழிவகை காண வேண்டும்.

த. மனோகரன்
சொத்துச் செயலாளர்
அனைத்து இலங்கை இந்து வாலிபர் சங்கம்.

கிளிநொச்சி ஆஸ்பத்திரி குறைபாடு அகற்ற நடவடிக்கை

உருத்திரபுரம் மே. 3

கிளிநொச்சி மாவட்ட அரசினர் வைத்தியசாலையில் நிலவி வரும் டாக்டர்கள் பற்றாக்குறையை நீக்கவும் நோயாளர் வார்ட்டுகளில் இருந்து வரும் சுகாதாரக் குறைபாடுகளை அகற்றவும் வைத்தியசாலையில் புதிதாக பதவி ஏற்றுள்ள மாவட்ட டாக்டர் நாகமுத்து சத்தியலிங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

டாக்டர்கள் பற்றாக்குறையை நீக்குவது தொடர்பாக அரசாங்க அதிபர் ஆகியோருடன் இவர் எழுத்து மூலம் தொடர்பு கொண்டுள்ளார்.

வார்ட்டுகளிலுள்ள சுகாதார குறைபாடுகள், குழாய் நீர் குறைபாடுகள், மின்சாரக் குறைபாடுகள் போன்றவற்றை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது

அரசர நோயாளர்களை கிளிநொச்சி வைத்தியசாலையிலிருந்து யாழ். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்ல உடன் யோசிக்கும் அப்புலன்ஸ் வாகனத்துக்கு எரிபொருள் கிடைப்பது கடினமாக உள்ளது

இது சம்பந்தமாக செய்யப்பட்டுள்ளது.

கும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தது

புங்குடுதீவு, மே 2

புங்குடுதீவு கிழக்கு தவிசாவிற்கு பூர் முருகமூர்த்தி ஆலய புனராவர்த்தன கும்பாபிஷேகம் சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது

முன்னர் மூர்த்தி இருந்த மூலஸ்தானத்தில் தற்போது வேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இம்மகா கும்பாபிஷேகத்தைப் பெருந்திரளான ஜனங்கள் கண்டு களித்தனர்.

கும்பாபிஷேக மூர்த்தியை தரிசித்து நன்மைகள் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

கதைப்பதற்கு இலகுவான இலங்கைப்பிரமியர சந்திப்பதற்கும் – ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாடங்கள்
விட்டுக்கும் அலுவலகத்துக்கும்
உருக்கிலும் தேக்கிலும்
உங்கள் ரசனைக்கேற்ற தெரிவு
டைனமிக்கா காட்சியறை
476, பிரதான வீதி, சுண்டுக்குளி.
(செஸ்ற் ஜோன்ஸ் கல்லூரி முன்பாக)

உதயன்

02. 05 1986 வெள்ளிக்கிழமை

DYNAMICA
STEEL & TEAK FURNITURE
for style & quality
WIDE SELECTION. FAIR PRICES
Dynamica Show Room
476, Main Street,
CHUNDIKULI.
(Opposite St. Johns College)

★ வடக்கு - கிழக்கு மக்களின்

பிரச்சினை தீராமைக்கு ஒற்றுமை இன்மையே காரணம்

மேதினக் கூட்டத்தில் தொண்டமான்

கொழும்பு மே 2
ஒற்றுமை இன்மையால் தான் வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள் தங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்க்க முடியாமல் கஷ்டப்படுகின்றனர். மலையக மக்கள் ஒற்றுமைப்பட்டதால் அவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு

மட்டக்களப்பில் மேதின கூட்டம்

மட்டக்களப்பு, மே 2
மட்டக்களப்பில் நேற்றுக் காலை நடந்த தேசிய கட்சியின் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தும் தீர்மானம் நிறை

வடக்கு,கிழக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
நாட்ட வேண்டும்.
பலாத்காரத்தின் மூலமே தமிழ் மக்களின் உரிமையை பெற்றெடுக்கும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளார்கள்
இவற்றுக்கெல்லாம் அரசு உடன் அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை உடன் நிறைவேற்ற வேண்டும்
இப்படி அவர் உரையாற்றினார்.
மற்றும் திரு. கே.செந்திவேல் (வடமாநாட்டு கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்) திரு சோ. தேவராசா, திரு அ. ரவீந்திரன் ஆகியோரும் உரையாற்றினர்.
நேற்றைய பேரணியில் எடுத்துச் செல்லப்பட்ட கோசங்கள் வருமாறு;
'வடக்கு கிழக்கு தமிழ்த் பிரதேசம்'
'தமிழருக்கு வழங்கு பிரதேச சுயாட்சி'
'இனப் படுகொலைகளை உடனே நிறுத்து'
'தடை வலயங்களை உடன் அகற்று'
'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'
'புத்தர் சொன்னார் அகிம்சை என்று ஜே.ஆர் சொன்னார் யுத்தம் என்று'
'மக்கள் சக்தி மாபெரும் சக்தி'
'தொழிற் சங்க உரிமையைப் பறிக்காதே'
'தொழிலாளி வர்க்கத்தை அடக்காதே'

யாழ் நகரில் நேற்று நடந்த ஆர்ப்பாட்டப் பேரணி

நல்லூர், மே 2
ஆயிரத்துக்கும் அதிக வாலிபர்கள் கலந்து கொண்ட மாபெரும் மேதின ஆர்ப்பாட்டப் பேரணி நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.
ஆண்கள், பெண்கள், குழந்தைகள் அனைவரும் கலந்து கொண்ட இப் பேரணி நேற்றுக் காலை 11 மணி அளவில் நல்லூர் இந்து விடுதி முன்பாக ஆரம்பமானது
இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தலைமையில் பேரணி நடைபெற்றது.
பருத்தித்துறை வீதி, அரியகுளம், ஸ்ரான்லி வீதி, மணிக்கூட்டு வீதி, மின்சார நிலைய வீதி, கஸ்தூரியார் வீதி, முனியப்பர் வீதி ஆகியவற்றினூடாகச் சென்று வைத்தீஸ்வராக் கல்லூரி முன்பாக பேரணி நிறைவு பெற்றது.
பேரணியில் கலந்து கொண்டவர்கள் கொழும்பில் இந்திய தூதரகமு நடத்துகிறது.
மலையக மக்களின் பிரச்சினைகள் பல ஆண்டுகளாகக் கவனிக்கப்படாது இருந்து வந்தன.
இ.தொ.கா. தலைமையில் மலையக மக்கள் ஒன்றுபட்டுப் போராடியதன் விளைவாக பிரஜாஉரிமைப் பிரச்சினை வெற்றிகரமாகத் தீர்க்கப்பட்டது.
இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.
இ.தொ.கா. பொதுச் செயலாளர் எம் எஸ் செல்வச்சாமி, அகில இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் எம். சிவஞானம் உட்பட பலர் பேசினர்.

புளொட் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 2
கடந்த 24 ஆம் திகதி இரவிலிலா கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பலியான தமிழீழ விடுதலை இயக்கத் தோழர்களுக்கு எமது வீர வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
புளொட் இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.
விடுதலைப் போராட்டத்தில் இழப்புக்கள் தவிர்க்க முடியாதவை.
ஆனால் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான இழப்புகள் தவிர்க்க முடியாதவை.
இந்நிலையில் தோழர்களின் இழப்பு எங்களது தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு மட்டும் ஏற்படவில்லை. தமிழ் மக்கள் சமூகாயத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதுகிறோம். —
இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மேதினக் கூட்டம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)
ஒற்றுமை அவசியத்...
(1ம் பக்கத் தொடர்ச்சி)
புத்தத்தினை நடத்தினாலும் எங்களது மேதினத்தில் நாம் நினைவுகூரவேண்டும்,
தொழிலாளரின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை சரியாக புரிந்து சரவ தொழிலாளர்களும் விவசாயிகளும், மாணவர்களும் ஒன்றிணைந்து ஒடுக்குமுறையாளருக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும்.
இவ்வாறு இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ். பிரதேச செயலாளர் துரை. இக்பால் குறிப்பிட்டார்.
முற்போக்கு எழுத்தாளர்கள் நமது படைப்புக்களிக் தொழிலாளர்களின் விடுதலையையும், அவர்கள் செய்ய வேண்டிய சரியான பாதையையும் கலைமைந்து காட்டுகிறார்கள்.
ஒடுக்கு முறைக்கு எதிராக உலக மக்கள் நடத்தும் போராட்டங்கள் எல்லாம் முற்போக்கு எழுத்தாளர்களாக சரித்திரமாக்கப்படுகிறது.
இவ்வாறு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு சாந்தன் குறிப்பிட்டார்.
சீவல் தொழிலாளர் தலைவர் ஒன்றியம் திரு செல்வராத்தினம், மாதர் மறுமலர்ச்சிப் பேரவை திருமதி சபாநாயகம், மற்றும் திரு. வி. தவராஜா, ரி. குகதாஸ், கே.கே. கோகுல குறிப்பாகத்து பலர் உரையாற்றினர்.
நியாயமான எமக்கு சற்றுத் தந்த பாடங்களை இன்றைய மேதினத்தில் நாம் நினைவுகூரவேண்டும்,
தொழிலாளரின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை சரியாக புரிந்து சரவ தொழிலாளர்களும் விவசாயிகளும், மாணவர்களும் ஒன்றிணைந்து ஒடுக்குமுறையாளருக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும்.
இவ்வாறு இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ். பிரதேச செயலாளர் துரை. இக்பால் குறிப்பிட்டார்.
முற்போக்கு எழுத்தாளர்கள் நமது படைப்புக்களிக் தொழிலாளர்களின் விடுதலையையும், அவர்கள் செய்ய வேண்டிய சரியான பாதையையும் கலைமைந்து காட்டுகிறார்கள்.
ஒடுக்கு முறைக்கு எதிராக உலக மக்கள் நடத்தும் போராட்டங்கள் எல்லாம் முற்போக்கு எழுத்தாளர்களாக சரித்திரமாக்கப்படுகிறது.
இவ்வாறு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு சாந்தன் குறிப்பிட்டார்.
சீவல் தொழிலாளர் தலைவர் ஒன்றியம் திரு செல்வராத்தினம், மாதர் மறுமலர்ச்சிப் பேரவை திருமதி சபாநாயகம், மற்றும் திரு. வி. தவராஜா, ரி. குகதாஸ், கே.கே. கோகுல குறிப்பாகத்து பலர் உரையாற்றினர்.

பிரிட்டிஷ் ஆட்சியில் தான் தமிழர் -- சிங்களவர் ஒரே ஆட்சியில் கொண்டுவரப்பட்டனர்

அமெரிக்க வானொலியில் விவாதம்

நியூயோர்க், மே 1
பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ்தான் தமிழரும் சிங்களவரும் ஒருகுட்டி அமைப்பின்கீழ் கொண்டு வரப்பட்டனர். அதற்கு முன்னர் தமிழரைத் தமிழரே ஆண்டு வந்தனர்.
இப்படி திரு. வாக்லி போல் என்பவர், அமெரிக்க வானொலியில் இடம் பெற்ற விவாதம் ஒன்றில் பங்குபற்றிய பேச்சையில் கூறினார்.
இலங்கை இனப்பிரச்சினை பற்றிய இந்த விவாதம் 30 நிமிடங்கள் இடம் பெற்றது
நியூயோர்க் நகர முன்னாள் மேயர் பொப்பார்பர் விவாதத்தை நெறிப்படுத்தினார்.
லட்சக்கணக்கான வானொலி நேயர்கள் இவ் விவாதத்தைக் கேட்டனர்.
சிங்கள தரப்பில் கொலம்போ பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் டாக்டர் ஜீவா கணேபோலவும் பங்குபற்றினார்.
தமிழர் தரப்பில் டாக்டர் மிக்ரோன் போல் என்பவரின் மகனும் சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய வருமான திரு வாக்லி போல் கலந்து கொண்டார்.
திரு வாக்லி போல், சரிநேர் ஈழம் அமைப்புத் தலைவராக இருந்து செயல்படுகிறார்.
டாக்டர் கணேபோல பேசுகையில்,
தென்னிந்தியாவில் இருந்து தமிழர் நாட்டு முறை இலங்கைக்கு படையெடுத்து வந்தனர்'-என்றார்.
திரு வாக்லி போல் பதிலளிக்கையில்,
150 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் தமிழரையும் தமிழரே ஆண்டனர் பிரிட்டிஷார் வந்தபின்னர் சிங்களவருடன் தமிழரையும் சேர்த்து அரசமைப்பு உருவாக்கப்பட்டது என்று சொன்னார்.

ஒற்றுமை அவசியத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
புத்தத்தினை நடத்தினாலும் நாம் மேதினத்தில் நாம் நினைவுகூரவேண்டும்,
தொழிலாளரின் உண்மையான நண்பர்கள் யார்? எதிரிகள் யார்? என்பதை சரியாக புரிந்து சரவ தொழிலாளர்களும் விவசாயிகளும், மாணவர்களும் ஒன்றிணைந்து ஒடுக்குமுறையாளருக்கு எதிராக ஐக்கியப்பட வேண்டும்.
இவ்வாறு இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் யாழ். பிரதேச செயலாளர் துரை. இக்பால் குறிப்பிட்டார்.
முற்போக்கு எழுத்தாளர்கள் நமது படைப்புக்களிக் தொழிலாளர்களின் விடுதலையையும், அவர்கள் செய்ய வேண்டிய சரியான பாதையையும் கலைமைந்து காட்டுகிறார்கள்.
ஒடுக்கு முறைக்கு எதிராக உலக மக்கள் நடத்தும் போராட்டங்கள் எல்லாம் முற்போக்கு எழுத்தாளர்களாக சரித்திரமாக்கப்படுகிறது.
இவ்வாறு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் திரு சாந்தன் குறிப்பிட்டார்.
சீவல் தொழிலாளர் தலைவர் ஒன்றியம் திரு செல்வராத்தினம், மாதர் மறுமலர்ச்சிப் பேரவை திருமதி சபாநாயகம், மற்றும் திரு. வி. தவராஜா, ரி. குகதாஸ், கே.கே. கோகுல குறிப்பாகத்து பலர் உரையாற்றினர்.

தமிழர் முஸ்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)
வரும் மாவலி அபிவிருத்தி திட்டக் காணியில் தமிழர், முஸ்லிம்களைத் தவிர வேறு எவரும் குடியேற்றப்படக் கூடாது.
இப்படி டாக்டர் நீலன் திருச்செல்வம் இந்தியக் குழுவிடம் தெரிவித்தார்.
இந்தியக்குழு இக்குழுத் [illegible]
[illegible] வந்த [illegible]
[illegible] கார்

இப்படி அமைச்சர் தொண்டமான் சொன்னார்.
இ.தொ.கா. பொதுச் செயலாளர் எம் எஸ் செல்வச்சாமி, அகில இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் செயலாளர் எம். சிவஞானம் உட்பட பலர் பேசினர்.

புளொட் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 2
கடந்த 24 ஆம் திகதி இரவிலிலா கடற்படையினருடன் ஏற்பட்ட நேரடி மோதலில் பலியான தமிழீழ விடுதலை இயக்கத் தோழர்களுக்கு எமது வீர வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.
புளொட் இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.
விடுதலைப் போராட்டத்தில் இழப்புக்கள் தவிர்க்க முடியாதவை.
ஆனால் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான இழப்புகள் தவிர்க்க முடியாதவை.
இந்நிலையில் தோழர்களின் இழப்பு எங்களது தமிழீழ விடுதலை இயக்கத்துக்கு மட்டும் ஏற்படவில்லை. தமிழ் மக்கள் சமூகாயத்துக்கு ஏற்பட்ட பேரிழப்பாகவே கருதுகிறோம். —
இவ்வாறு அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டணி ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
சந்தித்துப் பேசியது
இன்று (வெள்ளி) மீண்டும் அமைச்சர்கள் கலாநிதி நிலநாயகன், லலித் அத்துலத்முதலி ஆகியோரையும் இந்தியக் குழு சந்தித்துப் பேசவுள்ளது.
அமைச்சர் தொண்டமானுடனும் இந்தியக் குழு இன்று பேசவுள்ளது.

கல்வியங்காடு .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
[illegible] வந்த [illegible]
[illegible] மாணவர்கள்

நன்றி நவிலல்
யாழ். மருத்துவ சங்கத்தால் வழங்கப்பட்ட அன்பளிப்புக்கு உதவிய யாழ். மகளிர் போதனா வைத்தியசாலையின் வைத்தியர்களுக்கும் மற்வைத்தியர்களுக்கும் எனது சார்பாகவும், குடும்பத்தினரின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.
இப்படிக்கு,
வ. முருகன்
யாழ். மகளிர் போதனா வைத்தியசாலை.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த. ஜெயசீலன் மாணவர்களுக்காக வெளியீடு, 807, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15,3 ஆம் ஒழுங்கை மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 02-05-1986
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka Under Number Q J 60 W 86

விளையாட்டரங்கு

லங்கா சிமெந்து அணி தொடர்ந்து வெற்றி

— விளையாட்டுச் செய்தியாளர் சண் ஜோன்சன் —

யாழ்ப்பாணம், மே 2
கோக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கு எதிராக மடுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் போட்டியில் காங்கேசன்துறை லங்கா சிமெந்து லிமிட்டல் அணி வெற்றது
கோக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டியில் லங்கா சிமெந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.
இந்த அணி 45 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 147 ஓட்டங்களைப் பெற்றது.
அணித் தலைவர் தர்மராஜா 49 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்துவீச்சில் லோகன், மகேந்திரக்குமார் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் இராமானந்தன், சிறீகுமரன், சசிதரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.
இதற்கு பதிலளித்தாடிய லங்கா சிமெந்து அணி 20 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.
சிறீகுமரன் ஆகிய மிழக்காமல் 40 ஓட்டங்களைப் பெற்றார்
நிர்மராஜா, பாலசிங்கம், சிறீகுமரன், சந்திரன் ஆகியோர் முறையே 4,3,2,1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.
இதற்கு முன்னர் நடைபெற்ற தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்கு எதிரான ஆட்டத்திலும் லங்கா சிமெந்து அணி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.

பறக்கும் கழுகுகள் அணி சாம்பியன்

யாழ்ப்பாணம், மே 1
அண்மையில் நடைபெற்ற வரப்பிரதாப் போட்டியில் பறக்கும் கழுகுகள் விளையாட்டுக் கழகம் சாம்பியனாகியது.
உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நடைபெற்ற இப் போட்டியில் இந்தக் கழகத்தின் ஆண்கள் அணி, பெண்கள் அணி ஆகிய இரண்டு அணிகளும் சாம்பியன்களாகின.
இந்த நடைபெற்ற கெல்லிப் பிரிவு மெய்வல்லுனர் போட்டியில் இந்த கழகத்தைச் சேர்ந்த செல்வி ஜஸ்ரா நிர்மலராஜன் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டார்.

கலை ஒளி அணி சாம்பியன்

அரியாலை அணியின் ஆட்டம் சோபிக்கவில்லை

யாழ்ப்பாணம், மே 2
நாச்சமோட்டை சனசமூக நிலையம் நடத்திய 7 பேர் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இணுவில் கலை ஒளி மன்றம் அணி சாம்பியனாகியது.
நேற்று நடைபெற்ற இறுதியாட்டத்தில் இந்த அணி அரியாலை புனிதமேரி விளையாட்டுக் கழக 'பி' அணியை இலகுவாக தோற்கடித்தது
கலை ஒளி அணியின் பந்து வீச்சாளர் எஸ். துஷ்யந்தன் அற்புதமாக வைப்பற்றிய 4 விக்கெட்டுக்கள் இந்த அணியின் வெற்றிக்கு வித்திட்டது.
முதலில் துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 9.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 27 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது
தொடர்ந்து ஆடிய கலை ஒளி அணி 5 ஆவது ஓவரில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தில் வெற்றியீட்டியது
வரணியூர் செல்வச்சந்நிதி விளையாட்டுக் கழக மைதானத்தில் இப் போட்டி நடைபெற்றது
இந்தப் போட்டியில் கலை இறுதியாட்டத்தில் நாச்சமோட்டை சனசமூக நிலைய 'பி' அணியை அரியாலை புனிதமேரி விளையாட்டுக் கழக அணி 'பி' 23 ஓட்டங்களினால் தோற்கடித்தும் —
நாச்சமோட்டை சனசமூக நிலைய 'ஏ' அணியை இணுவில் கலை ஒளி மன்ற அணி 33 ஓட்டங்களினால் வென்றும் — இறுதிப் போட்டிக்குத் தெரிவாகி இருந்தன

தொழிலாள வர்க்கமும்

ஒடுக்கப்படும் இனமும் இணைந்து போராடும்காலம் இது

லங்கா சிமெந்து கூட்டத்தில் உரை

உடுவில், மே 2
தொழிலாளர்வர்க்கமும் ஒடுக்கப்படும் இனமும் ஒன்று சேர்ந்து சுதந்திரத் திற்காகப் போராடும் காலமிது.
காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத்தில் தொழிலாளர் எழுச்சிக் கூட்டத்திற்கு தலைமை வகித்துப் பேசிய வர்த்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கத்தின் லங்கா சிமெந்து நிறுவன கிளைத் தலைவர் திரு எஸ். கே. ஜோதிபாலா இவ்வாறு கூறினார்.
லங்கா தொழிற்சங்க சம்மேளன யாழ் மாவட்ட அமைப்பாளர் திரு. விஜயானந்தன் பேசுகையில் — இன்று தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைத் திருநாள். 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்'' என்ற அடிப்படையில் கீழ் ஒரு போராட்டமாகவே ஆரம்ப

சரணடைந்தால் . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
இழந்துள்ளார்கள்.
ஆர்மைசேர் காயம் அடைந்திருக்கிறார்கள். உயிரிழந்தவர்களிலும், காயமடைந்தவர்களிலும் இந்த திரேயாதிகளுடன் எதிரணியிலும் சம்பந்தமில்லாத அப்பாவி மக்களும் அடங்கியிருப்பர்கள். இது துர்அதிஷ்டவசமானது.
விஜயவுக்கு பாரதூர காயம் இருப்பினும் இறந்து ஒன்றும், பாலையூரில் ஒரு படகு, இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஆகியனவும் நிர்மூலமாகின.
வரை போராடுவதென்கிற நிர்ணயத்தை குழுக்கள் நிடசமாக்கப் பூண்டுள்ளன.
இவ்வாறான ஆக்கிர மூட்டுச் செயல்கள் கலைரத்தில் உள்ள வடக்கிலும் மெத்திலும் மேலும் நிலைமை சீர்குலைக்கச் செய்யும்.
ஆதலால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள சகல இயக்கப் பிரிவினர்களும் மக்களுக்கு பொறுப்பு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என அரசாங்கம் கேட்டுக்கொள்கிறது
இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதலை. . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கூறினார்.
மோதல்கள் மூலம் உக்கள் போராட்டத்தைப் பலவீனப்படுத்த வேண்டாம். இலங்கை அரசுக்கும் இந்தியாவுக்கும் இடையில் நடைபெறும் நற்போதைய சமாதானப் பேச்சுக்கள் தோல்வியில் முடியுமானால் இலங்கைத்தமிழரை இன அழிவிலிருந்து பாதுகாக்கும் ஒரேயும் பொறுப்பு உக்கள் மீது உண்டு என்றும் எம். ஜி. ஆர். சொன்னார்.
கேள்வி ஒன்றுக்கு அவர் பதில் அளிக்கையில், இலங்கையில் நடக்கும் தமிழர் கொலைகள் பற்றி இந்திய மத்திய அரசுக்கு பல தடவைகள் எடுத்துக் கூறிவிட்டேன். இனிமேலாவது தமிழ் மக்களுக்கு உரிய உள்ளவரை உதவு வேன் என்று கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org